மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

06.08.2022 சனிக்கிழமை
supeedsam.com
supeedsam@gmail.com

## இலங்கை மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு

# ஐக்கிய நாடுகள் சபை தயார்

### ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு



இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் உடனடி மற்றும் நீண்ட கால தேவைகளை நிறைவேற்றுவதற்குஜக்கியநாடுகள்சபைதயாராக உள்ளதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானத்தை தொடர்ந்து கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதாகவும் இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்கு சாதகமான சூழலையும் ஸ்திரத்தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானதாக இருக்கும் என ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார். ஜனாதிபதிக்கு வாழ்த்துச் செய்தியொன்றை விடுத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த சவால்களை எதிர்கொள்வதற்கான தேசிய மூலோபாயத்தை தயாரிப்பதில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இடையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி காட்டும் அக்கறையை ஐக்கிய நாடுகளின் செயலாளர் 02

## அமைச்சு சூது எங்களுக்கு வேண்டாம்



நிலவும் சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்காக நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன இணைந்து பொது பயணத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும், அது சர்வ கட்சி, ஒன்றிணைந்த நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் எனவும், இதில் எவ்விதமான அமைச்சுப் பதவிகளையும் பகிர்ந்து கொள்வது போன்ற எந்த வகையான டீல்களிலும் தாம் இணைய மாட்டோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (6) தெரிவித்தார். வழக்கமான கேவலமான 02

## பிள்ளையானுக்கும் அமைச்சு பதவி

சர்வகட்சி அரசாங்கத்தில் ஜீவன் தொண்டமான், ஏ.எல்.எம். அதாவுல்லா, சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்களுக்குஅதிகூடியசேவையைவழங்குவதற்காகஅந்த மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு அமைச்சு 02

## பொது மக்களுக்கு அவசர அறிவிப்பு

வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் விடுக்கப்படும் ஆலோசனைகளை முறையாக கடைப்பிடிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. அனர்த்தங்கள் நிகழுமாயின் அதுபற்றி துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாக நிலையத்திற்கு அறிவிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. துரித தொலைபேசி இலக்கம் 117 என்பதாகும். 10மாவட்டங்களைச் சேரந்த 65 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

## உணவுப் பொதியின் விலை குறைப்பு

எதிர்வர் ரும் திங்கட்கிழமையின் பின்னர், உணவுப் பொதியினதும், தேநீர் கோப்பையினதும் விலைகளை குறைக்க உள்ளதாக சிற்றுணவக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் திங்கட்கிழமை எரிவாயுவின் விலையும் குறைக்கப்பட உள்ளமையால் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

## மருத்துவப் பரிசோதனைக் கட்டணம் அதிகரிப்பு

ஓட்டுநர் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றுக்கான மருத்துவப் பரிசோதனைக் கட்டணம் எதிர்வரும் 08 ஆம் திகதி முதல் மாற்றியமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவ பரிசோதனை கட்டணம் மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்படி இலகுரக வாகனங்களுக்கான மருத்துவ பரிசோதனை கட்டணம் 1,500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், கனரக வாகனங்களுக்கான மருத்துவ பரிசோதனை கட்டணம், சிறுநீர் பரிசோதனை தவிர்த்து 1500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நாட்டில் இன்றும் துப்பாக்கி சூடு

கம்பஹா – கெஹல்பத்தர பகுதியில் இன்ற (06) பட்டப்பகலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சலூன் ஒன்றிற்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய இளைஞன் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் உடுகம்பொல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவராத நிலையில் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிபந்தனையற்ற ஆதரவு

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

நாட்டு நலனுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவோம் என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக தீவிரமடைந்தது. பாராமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றினைத்து சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பதவி விலகினார்கள். பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் 02



மட்டக்களப்பு ஆனைப்பந்தியில் இருந்து தாந்தாமலைக்கு பாத யாத்திரை..

## வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

டெங்கு, கொரோனா மற்றும் வைரஸ் காய்ச்சல் காரணமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களில் டெங்கு காய்ச்சல் காரணமாகவே அதிகளவான குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார பணிப்பாளர், ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் பணிப்பாளர் வைத்தியர்,ஜீ.விஜேசூரிய தெரிவித்தார்.

### விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளிக்க முயன்ற குற்றச்சாட்டில்

## 14 இலங்கையர்களிடம் விசாரணை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு புத்துயிர் அளிக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 14 இலங்கையர்கள் இந்தியாவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். திருச்சியில் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு கும்பலிடம் இருந்து 60 செல்போன்கள் மற்றும் 50 சிம்கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. கேளம்பாக்கம் அருகே தையூரில் உள்ள ஒரு 02

## அமைச்சு சூது எங்களுக்கு வேண்டாம்

அரசியல் கலாசாரத்தை மீண்டும் கொண்டு வந்து நாட்டின் 220 இலட்சம் மக்களை மீண்டும் துன்பத்திற்கு உள்ளாக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதிகாரமளிக்கப்பட்ட நிறைவேற்று பாராளுமன்ற குழுக்கள் மீண்டும் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதோடு, அமைச்சு பதவிகளை பெற்று அதன் சுமையை மக்கள் மீது பாரப்படுத்த வேண்டிய அவசியமில்லை எனவும், பாராளுமன்றத்தில் அதிகாரத்துடன் கூடிய குழுக்களின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் நல்ல செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களைப் போன்று நப்பாசையிலான அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ள கவனம் செலுத்தாமல், எமது நாட்டை வளமான நாடாக மாற்றுவதற்கான பொதுவான வேலைத்திட்டத்திற்கு ஆதரவை நல்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2019 ஜனாதிபதி தேர்தலில் மக்கள் எடுத்த தவறான முடிவினால் ஒரு தோல்வியுற்ற ஆட்சியாளர் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தார் எனவும், அவரது பலவீனமான ஆட்சியினால் முழு நாடும் அனாதரவாக மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் தெரணியகல தேர்தல் தொகுதி அமைப்பாளர் ரஞ்சித் பொல்கம்பல அவர்களின் தொகுதிக்கூட்டம் இன்று (06) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் அப்பகுதி ஏராளமான பிரதேச வாழ் மக்கள் கலந்து கொண்டனர்.

தற்போது நாட்டில் 220 இலட்சம் பேர் ஆதரவற்ற நிலையில் உள்ளதாகவும், பிடிவாதமும்,ஆணவமும்,மனசாட்சி இல்லாத, செயல்பட முடியாத அரசொன்றின் செயல்களே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

2019 டிசம்பரில் நாடு இருந்த நிலைக்கு நாட்டை மீண்டும் கொண்டு வர 5 ஆண்டுகளுக்கும் மேல் ஆகும் எனவும், 2 மாதங்கள், 3 மாதங்களில் நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற கனவுக் கதைகளுக்கு ஏமாற வேண்டாம் எனவும் அவ்வாறு கூறுவது பொய்யானது என்றும் அவர் தெரிவித்தார். இந்தப் பொய்க்கு இடமளிக்கக் கூடாது எனவும், எமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## பிள்ளையானுக்கும் அமைச்சு பதவி

பதவிகளை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். சர்வகட்சி அரசாங்கத்தில் 30 அமைச்சர்களும், 30 இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்படும் அதேவேளை, தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் பதவிகள் மாறும் எனவும் அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும்போது போது தமது உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு யோசனையொன்றை முன்வைக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவுடன் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடந்த நாட்களில் மேற்கொண்ட கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, பவித்ரா வன்னியாராச்சி,எஸ்.எம்.சந்திரசேன, ரோஹித அபேகுணவர்தன, எஸ். பி. திஸாநாயக்க மற்றும் நிமல் லன்சா ஆகியோருக்கு அமைச்சர் பதவிகளை வழங்க பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு

நாயகம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்யும்போது, சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தல் உட்பட, பொதுமக்களுடன் கலந்தாலோசிப்பது மற்றும் அனைத்து தரப்பினரிடையே உரையாடலை ஊக்குவித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண்களின் அரசியல் பங்களிப்பிற்கான இலங்கையின் முயற்சிகளை அங்கீகரித்து முன்னேற்றத்தை விரைவுபடுத்த ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதற்கு குறித்த செய்தியில் ஆதரவு தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் உடனடி மற்றும் நீண்ட கால தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தயாராக உள்ளதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானத்தை தொடர்ந்து கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

## நிபந்தனையற்ற ஆதரவு

ஒன்றிணைத்து அமைக்கப்படும் சர்வக்கட்சி அரசாங்கத்திற்கு பொதுஜன பெரமுன முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என பிரதமரிடம் குறிப்பிட்டுள்ளோம். நாட்டு நலனுக்கான ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

கோ ஹோம் கோட்டா என வலியுறுத்தியே காலி முகத்திடல் போராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டார்கள். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதை தொடர்ந்து போராட்டகாரர்களுக்கு அடுத்தக்கட்ட திட்டமிடல் ஏதும் கிடையாது.

காலிமுகத்திடலில் போராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுப்படுவது முறையற்றதாகும். கலவரத்தை அடக்குமுறையாலேயே அடக்க முடியும். ஜனநாயக ரீதியிலான போராட்டங்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் தடையேற்படுத்தாது. ஜனநாயகம் என்று குறிப்பிட்டுக் கொண்டு முன்னெடுக்கப்படும் வன்முறை சம்பவங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றார்.

## விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளிக்க முயன்ற குற்றச்சாட்டில்

வீட்டில் தேசிய புலனாய்வு முகமை திடீர் சோதனை நடத்திய போதே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன. திருச்சி மத்திய சிறைக்கு அருகில் உள்ள வெளிநாட்டினர் தங்க வைக்கப்பட்டிருந்த சிறப்பு முகாமில் கடந்த ஜூலை 20ஆம் திகதி என்ஐஏ குழுவினர் சோதனை நடத்தினர். போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 14 இலங்கையர்களை இந்தக் குழு விசாரித்தது. சோதனையின் போது, என்ஐஏ குழு 60 செல்போன்கள் மற்றும் 50 சிம் கார்டுகளுடன் ஒரு மடிக் கணினியையும் கைப்பற்றியிருந்தனர். முகாமில் உள்ள குறைந்தபட்சம் 14 கைதிகள் பாகிஸ்தானில் இருந்து கடத்தல்காரர்களுடன் தொடர்பில் இருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த கைதிகள் இந்தியாவிலும் இலங்கையிலும் இயங்கி வருவதாகவும், விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சிக்காக செயற்படுவதாகவும் என்ஐஏ தெரிவித்துள்ளது

# 100 நாட்கள் செயல்முனைவின் 06 ஆவது நாள்




(சுமன்)

“வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல்முனைவின் ஆறாம் நாள் போராட்டம் இன்றைய தினம் யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் இடம்பெற்றது. இப் போராட்டத்தில் யாழ் மாவட்ட மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து அமைதியான முறையிலும் கலாச்சார வெளிப்படுத்தல்களுடனும் இப்போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது. வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டின் வடக்கு கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்கள் தழுவிய ரீதியில் இச் செயல்முனைவு நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெட்ரோலியம் வர்த்தகம் செய்யும் புதிய நிறுவனங்களை மதிப்பிடுவதற்கு குழு



எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் பொருத்தமான நிறுவனங்களை மதிப்பிடுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழு நேற்று நியமிக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டரில் தெரிவித்துள்ளார். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு மேலதிகமாக பல நிறுவங்கள் ஈடுபட முடியும் என்றும் கூறியுள்ளார். இதேவேளை, இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்காக எட்டு பேர் கொண்ட குழுவொன்று நேற்று நியமிக்கப்பட்டது. குழுவின் பரிந்துரைகளை ஒரு மாதத்திற்குள் முன்வைக்குமாறும் அமைச்சர் விஜேசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.



“தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே”

அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

**திருக்கொடியேற்றம்**
**22.07.2022 வெள்ளிக்கிழமை**

**தீர்த்தோற்சவம்**
**12.08.2022 வெள்ளிக்கிழமை**

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

**22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்**

**12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்**



**விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)**

# யானை தாக்கி வீடு சேதம்



(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கண்ணகிகிராமம் 2 இன் 3ஆம் வட்டாரத்தில் நேற்றிரவு (05)யானையின் தாக்குதலுக்கு உள்ளான வீடொன்று சேதத்துக்குள்ளாகியுள்ளது. கணவன் மனைவி ஆகிய இருவரும் வாழ்ந்துவரும் வீடொன்றிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. ஆயினும் அதிஸ்டவசமாக குறித்த நேரத்தில் வீட்டில் யாரும் இல்லை என்பதுடன் அச்சந்தர்ப்பத்தில் வீட்டின் கூரையினை உடைத்த யானை உள்ளே இருந்த நெல்லை உண்டுள்ளதுடன் இழுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வேளாண்மை அறுவடை முடிவடைந்து வரும் இச்சந்தர்ப்பத்தில் யானைகள் தற்போது கிராமத்தை நோக்கி நகர்ந்து வரும் நிலை உருவாகியுள்ளது. இதன்காரணமாக குறித்த கிராமத்தில் வாழும் மக்கள் பீதியடைந்துள்ளதுடன் வருடாந்தம் இதுபோன்ற சம்பவங்கள் அவ்வப்போது இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். ஆகவே யானையின் தொல்லையில் இருந்து தங்களை பாதுகாக்க அரசாங்கம் நிலையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நீச்சல் தடாகத்தில் சடலம் மீட்பு



வி.சுகிர்தகுமார்

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் அக்கரைப்பற்றை 7ஃ4 பிரிவைச்சேர்ந்த 30 வயதுடைய இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் இருந்து நேற்று சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்க்கப்பட்டவர் குறித்த ஹோட்டலில் பலவருடகாலமாக கடமையாற்றி வந்த குழந்தைவடிவேல் புனிதராஜ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் அக்கரைப்பற்று இராமகிருஸ்ண தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் வணிகத்துறையில் கல்வி பயின்றவர் என்பதுடன் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறியை பூர்த்தி செய்ததன்பின்னர் ஹோட்டலில்கடமையாற்றிவந்தவர் எனவும் உறவினர்களால் தெரிவிக்கப்படுகின்றது. விடுமுறை கிடைக்கும் போதெல்லாம் அவ்வப்போது வீட்டிற்கு வந்து செல்பவர் எனவும் கூறப்படுகின்றது. அத்தோடு மிகவும் சாதூர்யமான பக்குவமிக்க பண்பான ஒருவர் எனவும் அவரது நண்பர்கள் மூலம் அறிய கிடைத்துள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞனை காணவில்லை என முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு 04ஆம் திகதி பதிவு செய்யப்பட்டதை அடுத்து நேற்று (05) காலை ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் இருந்து சடலமாக அவர் மீட்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட அவரது குடும்பத்தினர் நேற்று முல்லைத்தீவு சென்றடைந்துள்ளதுடன் நேற்றுமுதல் மரண விசாரணைகள் முல்லைத்தீவு பொலிசாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. இச்சம்பவத்தினால் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசம் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடிகர் நாசர் உடனான கதையாடல்



கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகத்தின் ஏற்பாட்டில் நடிகர் நாசர் உடனான கதையாடல் நாளை(07) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 தொடக்கம் மு.ப.11.30வரை சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள விரும்புகின்றவர்கள் கலந்து கொள்ள முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பொதுச் சந்தையில் பொதுமக்கள் பாவனைக்கு தராசு



(பைஷல் இஸ்மாயில்)

அளவை நிறுவையில் இடம்பெற்று வருகின்ற மோசடிகளை தடுக்கும் நோக்கில் சம்மாந்துறை பிரதேச சபையினால் நிறுவையினை சரிபார்க்கும் தராசு சம்மாந்துறை பொதுச் சந்தையில் பொருத்தப்பட்டுள்ளதாக தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷாட் தெரிவித்தார். பொதுமக்கள் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்கின்ற பொருட்களின் சரியான அளவு நிறுவைகளை பயனாளர்கள் இதன் மூலம் சரிபார்த்து உறுதி செய்து கொள்வதற்காகவும், இவ்வாறு சரியான அளவு நிறுவைகளை சரிபார்ப்பதனால் வியாபாரிகள் செய்கின்ற மோசடிகளை அல்லது செய்ய முனைகின்ற செயற்பாடுகள் தடுக்கப்படும் என்றும் அவ்வாறு மோசடிகள் இடம்பெறுமாக இருந்தால் பொதுமக்கள் தங்களின் முறைப்பாடுகளை 1977, 067 2260043 என்ற இலக்கங்களை தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்று தவிசாளர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்குள் மக்கள் கஷ்டப்படுகின்ற இந்நிலைமையில் அவர்களின் வாழ்வாதார சுமைகளை மிகக் கஸ்டத்துக்கு மத்தில் சுமந்து வருகின்றனர். அதிலும் சில வியாபாரிகள் அவர்களின் கொள்வனவுப் பொருட்களில் மோசடி செய்கின்றனர். இதனைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த தராசை பொதுச் சந்தையில் பொருத்த நடவடிக்கை எடுத்தோம் என தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷாட் சுட்டிக்காட்டினார்.

# இராணுவ அதிகாரிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவும்

## மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தல்



குற்றச்சாட்டில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சிலெட் வலியுறுத்தியுள்ளார். அதற்காக சர்வதேச நீதி அமைப்பை பயன்படுத்துமாறும் 47 நாடுகளின் தலைவர்களிடம் மிச்சேல் பச்சிலெட் கோரிக்கை விடுத்துள்ளார். குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட 58 இராணுவத்தினரையும் கைது செய்ய அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே அவர்களை கைது செய்ய சர்வதேச நீதி அமைப்பை அமல்படுத்த வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார். தற்போது இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு மட்டுமே இலங்கை இராணுவ அதிகாரிகள் செல்லமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொதுஜன பெரமுனவின் தலைமையகத்திற்கு விஜயம் செய்த பிரதமர்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்திற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன விஜயம் செய்துள்ளார். மேலும் இந்த விஜயத்தின் போது, முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்களை அவர் சந்தித்துள்ளார். இதன் போது கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ச கட்சித் தலைமையகத்திற்குச் நேரம் ஒதுக்கியமைக்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்ததோடு அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் கட்சி அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஏழு பில்லியன் டொலர் நட்டம்

எரிபொருளுக்கான செலவுக்கு மேலதிகமாக மாதாந்தம் ஏழு பில்லியன் டொலர் நட்டத்தை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் சந்திக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் விமானத்திற்கான எரிபொருளை வழங்காததாலும், அந்த எரிபொருளை இந்தியாவிடமிருந்து பெற வேண்டியமையினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியா செல்லும் விமானக் குழுவினருக்கு தங்குமிடம் மற்றும் இதர வசதிகள் செய்தல், விமானம் தரையிறக்கல் மற்றும் புறப்பாட்டுக்காகவும் செலவு ஏற்படுகின்றது. ஒரு மாதத்திற்கு 25 முதல் 30 விமானங்கள் இந்தியாவிற்கு செல்வதாகவும் ஒரு நாளைக்கு ஐந்தரை லட்சம் லீட்டர் எரிபொருள் தேவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நடமாடும் சேவை ஊடாக நான்காவது தடுப்பூசி



நடமாடும் சேவை ஊடாக நான்காவது கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் இந்த சேவையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார். இதைத்தவிர நான்காவது டோஸ் தடுப்பூசியை சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் மருத்துவமனைகளில்கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

# உலர் உணவுப் பொதி வழங்கி வைப்பு



(க.ருத்திரன்)

'நமக்காக நாம்' என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு வந்தாறுமூலை அகம் ஆதரவுக் கரங்கள் நிறுவனத்தினால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் இன்று (6) வழங்கி வைக்கப்பட்டது. மேற்படி அமைப்பின் தலைவர் த.நவதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பதிவாளர் திருமதி த.பஞ்சாட்ச்சரம், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் ஆ.சசிதரன், அகம் ஆதரவுக் கரங்கள் நிறுவனத்தின் பொருளாலர். லெ.தேவப்பிரதீபன், ஆலோசகர் ந.பஞ்சாட்சரம் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.மத்திய கிழக்கு நாட்டில் தொழில் புரிந்துவரும் பிரதேச இளைஞர்களின் நிதி சேகரிப்பில் இருந்து இவ் மனிதநேய உதவியானது அகம் ஆதரவுக் கரங்கள் நிறுவனத்தின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.

# மட்டக்களப்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தடுப்பு நான்காம் கட்டம் பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை, மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்குமான பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று(05) திகதி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மீண்டும் கொரோனா பரவல் ஆரம்பித்துள்ள நிலையில் நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும் என்ற அரசின் அறிவுறுத்தலுக்கமைய முதற்கட்டமாக அரச உத்தியோகத்தர்களுக்கு குறித்த நான்காம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது ஆலோசனைக்கு அமைவாக, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் அவர்களது மேற்பார்வையின் கீழ் மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி இ.உதயகுமாரின் வழிநடாத்தலில் மண்முனை வடக்கு சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வை சுகாதார பரிசோதகர் வி.விஜயகுமார், கல்லடி பொது சுகாதார பரிசோதகர் எஸ்.அமீர்தாப் மற்றும் புளியந்தீவுக்கு பொறுப்பான சுகாதார பரிசோதகர் எஸ்.தீபக்குமார் உள்ளிட்ட மேலும் பல சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்களினால் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதுடன், குறிப்பாக 60 வயதுக்கு மேட்பட்டவர்களும் நாறப்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் குறித்த தடுப்பூசியினை செலுத்துவதனால் உயிர் ஆபத்தினை தவித்துக் கொள்ள முடியும் என்பதுடன், எமது நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் கொவிட் – 19 பரவல் மீண்டும் ஆரம்பித்துவருவதுடன் மரணங்களும் பதிவாகிவருவதனால் தடுப்பூசியை பெற்றிக்கொள்வதன் தேவையை உணர்ந்து அனைவரும் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதுடன் உயிர் ஆபத்திலிருந்து தம்மை தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று சுகாதார துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

# மனித எச்சங்கள் பகுப்பாய்வுக்கு மன்றில் விண்ணப்பம்



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் திருக்கேதீஸ்வரப் பகுதியில் மனித புதைகுழியிலிருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எச்சங்களை பல காலங்களாக அனுராதபுரம் வைத்தியசாலையில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ளது. என்ன பரிசோதனை மேற்கொள்ளப் போகின்றீர்கள் என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு தெளிவுப்படுத்தப்பட வேண்டும் என்று கடந்த இதன் வழக்கின்போது பாதிக்கப்பட்ட உறவுகளின் சார்பில் வழக்கில் முன்னிலையாகி இருந்த சட்டத்தரனிகளால் முன்வைக்கப்பட்டதுக்கு அமைவாக தெரிந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்களை பகுப்பாய்வுக்கு உட்பட்ட நீதிமன்றில் விண்ணப்பம் மன்றில் வைக்கப்பட்டது.

மன்னார் திருக்கேதீஸ்வரப் பகுதியில் 2013 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழி தொடர்பான வழக்கு வெள்ளிக்கிழமை (05.08.2022) மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி அப்துல் சமட் கிப்துல்லா முன்னையில் விசாரனைக்கு எடுக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கைத் தொடர்ந்து இவ் வழக்கில் பாதிக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றில் ஆஜராகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி வீ.எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

2013 ஆம் ஆண்டு மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு வெள்ளிக்கிழமை (05.08.2022) மன்னார் நீதவான் நீதிமன்றில் விசாரனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச சட்டத்தரனியுடன் இவ் புதைகுழியில் அகழ்வு பணிக்கு தலைமை தாங்கியிருந்த சட்டவைத்திய நிபுணர் டீ.எல். வைத்தியரத்தின மற்றும் ஹேவனகே ஆகியோருடன் குற்றப்புலணாய் அதிகாரிகளும் இவ் வழக்கின்போது மன்றில் ஆஜராகி இருந்தனர்.

இவர்கள் மன்றில் தங்கள் கருத்துக்களை முன்வைக்கப்பட்டபோது ஏலவே மன்னார் திருக்கேதீஸ்வர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வு செய்யப்பட்ட மனித எச்சங்கள் தற்பொழுது அனுராதபுரத்தில் வைத்தியசாலையில் காணப்படுவதாகவும்



இந்த மனித எச்சங்களிலிருந்து சீ14 காபன் பரிசோதனைக்கு அமெரிக்காவிலுள்ள வ்லோரடா மானிலத்திலுள்ள 'பீற்றஅர்ரிடிக்' என்ற நிறுவனத்துக்கு அனுப்புவதற்கான மாதிரிகளை தெரிவு செய்வதற்காக இம் மாதம் (ஆவணி) 24 , 25 , மற்றும் 30 ந் திகதிகளில் தங்களுக்கு ஏற்ற திகதிகளாக இருப்பதால் இவ் தினங்களில் மன்னார் அல்லது அனுராதபுரம் நீதவான் நீதிமன்ற நீதிபதிகளுக்கு முன்னிலையில் அகழ்வு செய்யப்பட்ட மாதிரிகளை பிரித்தெடுப்பதற்கு தங்களுக்கு அனுமதி வழங்கும்படியும்

பரிசோதனைகளுக்காக எச்சங்கள் எடுக்கப்பட்ட பின் ஏனைய மனித எச்சங்களை கொழும்பு வைத்தியரத்தினாவின் ரேடியோ காபன் சோதனை செய்யும் நிறுவனமாகிய கொழும்பு பத்திலுள்ள நிறுவனத்துக்கு அதனை பாரப்படுத்துவதற்கு ஐ.சீ.ஆர்.சீ. யின் துணையுடன் இவ் எச்சங்களை கொள்கலன்களில் பொதியிடப்பட்டு அங்கு அனுப்பி வைப்பதற்கும் தாங்கள் தீர்மானித்திருப்பதாகவும்

இந்த குறித்த தினங்களில் இவ்வாறான பிரித்தெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட நீதிமன்றம் அனுமதிக்குமாறு இவர்களால் இவ் கோரிக்கை மன்றில் முன்வைக்கப்பட்டது.

இந்த சமயத்தில் இது தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சார்பாக மாந்தை திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி வீ.எஸ்.நிரஞ்சன் பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக தனது கோரிக்கைகளை தான் முன்வைக்கையில் இவ்வாறான நடவடிக்கை முறை எவ்வாறு வழக்கு தொடர்களினால் நடத்தப்பட போகின்றது என்ற விளக்கம் நீதிமன்றில் கோப்பிலிடப்பட வேண்டும் என்றும் இந்த பிரித்தெடுக்கும் நடவடிக்கைளின்போது மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி அவர்கள் நேரடி கண்காணிப்பில் நடைபெற வேண்டும் என்றும் அத்துடன் பாதிக்கப்பட்ட தரப்பில் ஆஜராகி வரும் சட்டத்தரனிகளும் இதில் பங்குபற்றி கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் அத்துடன் இதனுடன் கலந்து கொள்ளும் அனைத்து தரப்பினருடனும் மேற்கொள்ளப்படும் ஆலோசனைகளின் அடிப்படையிலேயே இவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் இது சர்வதேச நியமனங்களுக்கு அமைவாகவும் வெளிப்படுத்தல் தன்மையாகவும் ஊடகங்களின் பங்குபற்றுதலுடன் இவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரனியால் இவ் கோரிக்கைகள் மன்றில் முன்வைக்கப்பட்டன.

இந்தவேளையில் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி தாங்கள் பகுப்பாய்வுக்காக மாதிரிகளை தெரிவு செய்ய இருக்கும் குறிப்பிட்ட திகதிகள் ஆனது அன்றைய தினம் இவ் மன்றில் பல வழக்குகள் விசாரனைகளுக்கு இருப்பதனால் இவ் தினங்களில் இந்நாட்களை ஒதுக்குவதில் சிரமம் காணப்படுவதால் இது குறித்து கட்டளை ஒன்று ஆக்குவதற்கு 24.08.2022 அன்று இவ் வழக்கை தவணையிட்டுள்ளார்.

இவ் மனித குழியானது 2013 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரம் ஆலய பகுதியிலிருந்து மாந்தை நோக்கி திருக்கேதீஸ்வர ஆலய வீதியோரமாக அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக குடிநீர் குழாய் நிலத்தில் பதித்துச் சென்றவேளையிலேயே இவ் மனித புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டு பல மனித எச்சங்கள் அகழ்வு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



"வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்"

தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா - 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# கிழக்கு மாகாண கலாசார திணைக்களத்திற்கு புதிய பணிப்பாளர்



**(பைஷல் இஸ்மாயில்)**

கிழக்கு மாகாண கலாச்சார திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக திருமதி எஸ். சரண்யா தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். கிழக்கு மாகாண கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றி வந்த எஸ். நவநீதன் மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக பணிப்பாளராக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு (திருமதி) எஸ்.சரணியா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பதில் உதவிப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராகவும் கடமையாற்றி வந்த நிலையிலேயே ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாணவ தலைவர்களுக்குசின்னம் சூட்டும் நிகழ்வு






**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் எம்.சீ.எம்.ஏ.சத்தார் தலைமையில் பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலைய கல்விப்பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி எம்.ஐ.எம்.நவாஸ், நகர சபை தவிசாளர் எஸ் எச்.எம். அஸ்பர், தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் யூ.எல். ஜாபிர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாணவத் தலைவர்களுக்கான சின்னங்களை அணிவித்தனர். அத்துடன் மாணவத் தலைவர்களுக்கான மேலங்கியும் 2002ஆம் ஆண்டு உயர் தரம் கற்ற பழைய மாணவர்களால் பழைய மாணவர் சங்கத்தினர் சார்பாக அன்பளிப்புச் செய்யப்பட்டது.

## கொக்குவில் பொதுச்சந்தைக்கு

# அடிக்கல் நட்டு வைப்பு





உலக வங்கியின் நிதி உதவியில் மட்டக்களப்பு மாநகர சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள கொக்குவில் பொது சந்தையின் இறைச்சி மற்றும் மீன் விற்பனை தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வானது நேற்று (05) மட்டக்களப்பு மாநகர சபையின் 3ஆம் வட்டார உறுப்பினர் க.ரகுநாதன் தலைமையில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாநகர சபையானது, உலக வங்கியின் “உள்ளூர் அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் ஊடாக சுமார் 5 மில்லியன் ரூபாய் செலவில் நவீனமயப்படுத்தபட்ட வகையில் கொக்குவில் பொதுச் சந்தைக்கான இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் விற்பனை தொகுதியானது நிர்மாணிக்கப்படவுள்ளது.

உள்ளூர் வியாபாரிகளினதும், நுகர்வோரினதும் நன்மைகருதி நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி விற்பனை தொகுதிக்கான அடிக்கல்லினை மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லினை நட்டு வைத்தார். இந் நிகழ்வின் விசேட அதிதியாக மாநகர ஆணையாளர் நா.மதிவண்ணன் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக மாநகர சபையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு அடிக்கல்லினை நட்டு வைத்தனர். அத்துடன் கொக்குவில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள், ஆலய மற்றும் விளையாட்டு கழகங்களின் நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




“தா” என்றால் “இந்தா” என்று வழங்கும்

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய

வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!

விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)



# ரணிலின் திசைமாறிய சர்வதேச பயணம்

## சீனா கப்பலின் பின்புலம்?

இலங்கை அரசியலில் அனைத்தும் தலை கீழாகவே சென்று கொண்டிருக்கிறது. யார், யாரோடு இருக்கின்றார்கள் என்றே தெரியவில்லை. நண்பர்கள் பகை பட்டுள்ளனர். எதிரிகள் ஒன்று பட்டுள்ளனர். அரசியலில் யாருமே நிரந்தர நண்பனுமில்லை, எதிரியுமில்லை என்ற கூற்றுக்கான உண்மையான அர்த்தத்தை இலங்கை அரசியல் வழங்கி கொண்டிருக்கின்றது.

சர்வதேச மற்றும் இலங்கை அரசியலில் இந்தியா, அமெரிக்கா என்பதான ஒரு அணியும், சீனா, ரஸ்யா என்பதான ஒரு அணியும் ( கட்டுரைக்கு அவசியமான நாடுகளை மாத்திரம் இணைத்துள்ளேன் ) உள்ளமை யாவரும் அறிந்ததே! இதில் இந்தியா, அமெரிக்கா ஆகியவற்றோடு ஒன்றிணைந்து செல்லும் பண்பையே ரணில் இதுவரை காலமும் வெளிப்படுத்தியிருந்தார். தற்போதைய ரணிலின் பாதை சீனா, ரஸ்யா நோக்கி திரும்பியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதுவே ரணிலின் சர்வதேச இயலாமையை வெளிப்படுத்தும் புள்ளி. ரணிலின் கடந்த கால தொடர்புகள், அவருக்கு பயனளிக்கவில்லை. இனி அவரது வெற்றிக்கு சர்வதேச அரசியல் இராஜதந்திர நகர்வுகளே கை கொடுக்க வேண்டும். இதனை எதிரியை வளைக்கும் உத்தி அல்லது நண்பனுக்கும் அழுத்தம் வழங்கி, சாதிக்கும் உத்தி எனலாம்.

இந்தியாவின் பலத்த எதிர்ப்பையும் மீறி இலங்கை பாதுகாப்பு அமைச்சு சீனாவின் யுவான் வாங் 5 கப்பலுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த கப்பல் இலங்கைக்குள் நுழைந்து, திரும்பினால், நிச்சயம் இந்தியா, தனது ஆட்டத்தை காட்ட ஆரம்பிக்கும். தன்னை பாதுகாக்க ஆரம்பித்தேயாக வேண்டிய நிர்ப்பந்தமும் அதற்குள்ளது. அதே நேரம் இலங்கை நோக்கி வந்துகொண்டிருக்கும் சீன கப்பலை நிறுத்தினால், சீனா பேயாட்டம் ஆடும். சீனாவின் பொருளாதார பேயாட்டத்தை தாங்கும் நிலையில் இலங்கையில்லை.

தற்போது ரஷ்யாவிடம் எரிபொருளை பெற இலங்கை அரசு முயற்சிக்கின்றது. ரஸ்யாவும் இலங்கைக்கு உதவும் நிலையில் இல்லை. அதற்கும் பெருமளவான பண பற்றாக்குறை உள்ளது. குறைவான விலையில் வழங்கினாலும், இலவசமாக வழங்காது. இதனாலேயே இந்தியா ரஸ்யாவிடமிருந்து எரிபொருளை வாங்கி, இலங்கைக்கு கூடிய விலை கடனுக்கு வழங்கியுள்ளது. இந் நிலையில் இந்த பயணமும் ரணில் அரசுக்கு பெரு வெற்றியை கொடுக்கும் வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது.

ரஸ்யா, உக்ரேன் மீது தாக்கிய பாணியில் சீனா, தாய்வான் மீதான தாக்குதலுக்கு தயாராகிறது. சொற்போர்கள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. இந்த தாக்குதல் ஆரம்பித்தால் மூன்றாம் உலக போரின் ஒரு சிறிய வடிவத்தை அங்கே பார்க்கலாம். அமெரிக்கா நேரடியாக தாய்வானுக்கு உதவும் என நம்பப்படுகிறது. அதற்கான நம்பிக்கையை தாய்வானுக்கு பல வழிகளிலும் வழங்கியுள்ளது. அண்மையில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் தாய்வானுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் உள்ள சீனாவுக்கு எதிராக தொலைவில் உள்ள அமெரிக்கா அவ்வளவு எளிதில் உதவ முடியாது. எனவே, தாய்வானுக்கு அருகில் உள்ள நாடுகளின் உதவி நிச்சயம் அவசியம். இந்த மோதலின் போது அமெரிக்காவுக்கு உதவ முடியுமான ஒரே ஒரு நாடு இந்தியாவாகும். எனவே, இந்தியா தொடர்பில் சீனா கவனமாக இருக்க வேண்டிய தேவையுள்ளது.

இந்தியாவும், சீனாவும் நிரந்தர பகை நாடுகள். தீர்க்க முடியாத எல்லை பிரச்சினை இருப்பதால் அவற்றிற்குள் உடன்பாடு எட்டப்படுவதன்கான சாத்தியமே இல்லை. இந் நிலையில் இந்தியாவின் நட்பு நாடுகளை அடையாளம் காண வேண்டிய தேவை சீனாவுக்கு உள்ளது. தற்போது நடந்துகொண்டிருக்கும் ரஸ்யா உக்ரைன் போரை, இந்தியா, தனக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டிருக்கின்றது. இந்தியாவின் சர்வதேச கொள்கை மாறியுள்ளதா, அதன் உறுதி தன்மை எவ்வாறுள்ளது, இந்தியாவின் பலம் என்ன, இலங்கை இந்திய உறவு எவ்வாறு உள்ளது போன்ற பல்வேறு வினாக்களுக்கான விடைகள் சீனாவுக்கு அவசியம். இந்த கப்பல் வந்து போனல் அதற்கான விடைகளை சீனா பெற்றுக்கொள்ளும். எதிரியின் பலத்தை நாடி பிடித்துவிட்டால், எதிர்ப்பது இலகுவாகிவிடும்.



இலங்கை இந்தியா உறவு வலுவானது. அயல் நாடல்லவா? இலங்கையின் பொருளாதார பிரச்சினைக்கு இந்தியாவின் ஒரு மாநிலமான தமிழ் நாடு உதவி செய்திருந்தமை இலங்கை இந்தியா உறவின் உறுதியை வெளிப்படுத்துகிறது. இந்தியா இலங்கை உறவை விட ரணில் இந்தியா உறவு மிக வலுவானது. இது சீனாவுக்கு எப்போதும் ஆபத்தானது. இலங்கையின் தற்போதைய நிலை சீனா இலங்கையை முழுமையாக வளைப்பதற்கு சாதகமாக அமைந்துள்ளது. ஜனாதிபதி தெரிவின் போது இந்தியா டலஸ் அணிக்கு ஆதரவளித்துள்ளதால், ரணில் இந்தியா உறவிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இவற்றை சாதகமாக பயன்படுத்தியே சீனாவானது இந்திய இலங்கை உறவை துடைத்தெறிய முனைகிறது. இலங்கை இந்திய உறவில் விரிசல் ஏற்படுவதற்கான அதிக சாத்தியமே தெரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளை இலங்கையர்கள் மறந்துவிட முடியாது. இருந்தாலும் இலங்கைக்கு தொடர்ந்து உதவும் நிலையில் இந்தியாவும் இல்லை. இந்தியாவின் பொருளாதாரமும் அவ்வளவு உறுதியாக இல்லை என்பதே உண்மை. தற்போதைய நிலையில் இலங்கைக்கு உதவி செய்யும் ஆற்றல் உள்ள நாடு சீனா மாத்திரம் என்பதே உண்மை. நட்புக்காக இந்தியாவுடன் உறவு வைத்திருப்பதா அல்லது தேவைக்காக சீனாவை அனுசரிப்பதா என்ற இக்கட்டிலேயே இலங்கை மாட்டியுள்ளது. இலங்கை நட்பை பாராட்டும் நிலையில் இல்லை. வேறு வழியில்லை சீனாவுக்காக இந்தியாவை பகைக்கும் நிலையிலேயே உள்ளது. இந்த சார்பு கொள்கையாலேயே சீனாவின் சார்பு அணியாக கருதப்படும் விமல் அணியினர் ரணிலை ஆதரிக்கின்றனர் எனலாம்.

எது எவ்வாறு இருப்பினும், இச் செயற்பாடு பாரிய அரசியல் புரட்சிக்கு வித்திடும் என்பதில் ஐயமில்லை. தன்னை தாக்க வருபவனை அரவணைக்கும் இலங்கையோடு, இனி இந்தியா நட்பு பாராட்ட முனையாது. இந்தியாவோடு மலையக மற்றும் தமிழ் கட்சிகள் அனைத்தும் உள்ளன. முஸ்லிம் கட்சியொன்றும் இந்தியாவின் ஏஜென்டாக செயற்படுவது கடந்த கால சான்றுகளுடனான வரலாறு. இலங்கை அரசியலில் சிறுபான்மையினரின் வகிபாகம் மிக அவசியமானது. அது எதிர்வரும் தேர்தலில் கடந்த காலங்களை விட முக்கியத்துவம் பெறும். எனவே, எதிர்வரும் தேர்தலில் ரணிலுக்கு எதிராக இந்தியா பலமான வியூகங்களை அமைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்,
சம்மாந்துறை

**இலங்கை இந்தியா உறவு வலுவானது. அயல் நாடல்லவா? இலங்கையின் பொருளாதார பிரச்சினைக்கு இந்தியாவின் ஒரு மாநிலமான தமிழ் நாடு உதவி செய்திருந்தமை இலங்கை இந்தியா உறவின் உறுதியை வெளிப்படுத்துகிறது. இந்தியா இலங்கை உறவை விட ரணில் இந்தியா உறவு மிக வலுவானது. இது சீனாவுக்கு எப்போதும் ஆபத்தானது. இலங்கையின் தற்போதைய நிலை சீனா இலங்கையை முழுமையாக வளைப்பதற்கு சாதகமாக அமைந்துள்ளது. ஜனாதிபதி தெரிவின் போது இந்தியா டலஸ் அணிக்கு ஆதரவளித்துள்ளதால், ரணில் இந்தியா உறவிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இவற்றை சாதகமாக பயன்படுத்தியே சீனாவானது இந்திய இலங்கை உறவை துடைத்தெறிய முனைகிறது. இலங்கை இந்திய உறவில் விரிசல் ஏற்படுவதற்கான அதிக சாத்தியமே தெரிகின்றமை குறிப்பிடத்தக்கது.**

# இன்று திராய்க்கேணி படுகொலை தினம்!



## 32 வது வருட நினைவேந்தல்

**06.08.2022**

அன்று 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆறாம் தேதி திராய்க்கேணி எனும் தமிழ் கிராமம் இரத்த வெள்ளத்தில் மிதந்தது.

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரே ஒரு தமிழ் கிராமம் திராய்க்கேணி கிராமமாகும். அங்கு 286 குடும்பங்கள் சீரும் சிறப்புமாக நிம்மதியாக வாழ்ந்து வந்தன.

ஆனால்,1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆறாம் தேதி அந்த நிம்மதிக்கும் ,வாழ்க்கைக்கும் இனவாதிகளால் வேட்டு வைக்கப்பட்டது.

ஆம் ,அங்கு நான்கு கவச வாகனங்களில் வந்தவர்கள் கிராம மக்களை ஆலயத்திற்கு வரவழைத்து ஏதுமறியாத 54 பேரை மிகவும் குருரமாக ஈவிரக்கமின்றி கத்தியாலும், கோடரியாலும் வெட்டி கொலை செய்தார்கள்.

தமது கண்களின் முன்னால் தமது உதிர உறவுகள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்ததை கண்டவர்கள் மறுகணமே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காரைதீவு, விநாயகபுரம் ,கிரான்குளம், மட்டக்களப்பு என்று புலம்பெயர்ந்தார்கள்.

பலர் துன்ப வேதனைகளோடு காரைதீவில் இருந்த விபுலானந்த மகா வித்தியாலய அகதி முகாமில் தஞ்சம் அடைந்தார்கள்.



பின்னர் 04 ஆண்டுகளுக்கு பிறகு 1994 ஆம் ஆண்டு மீண்டும் சொந்த ஊரான திராய்க்கேணியில் குடியமர்த்தப்பட்டார்கள்.

ஆனால், ஆக 121 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேறின. ஏனையவர்கள் திரும்பவில்லை.

1990 காலப்பகுதியிலே தலைவராக இருந்து பின்பு படுகொலை செய்யப்பட்ட மயிலிப் போடி என்பார் அப்போது சர்வதேச, உள்நாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்தை இங்கு பதிவிடலாம் என்று நினைக்கின்றோம்.

அன்று 1990 ஆகஸ்ட் மாதம்ஆறாம் தேதி காலை 7 மணி அளவில் அக்கரைப்பற்று பக்கத்தில் இருந்து சுமார் இருநூறு முஸ்லிம் இனவாதிகளும் ,சீருடை தரித்த துப்பாக்கி ஏந்திய படையினரும் கவச வாகனத்தில் வந்தார்கள்.

.அவர்கள் வீடு வீடாகச் வந்து பிள்ளையார் ஆலயத்திற்கும், மாரியம்மன் ஆலயத்திற்கும் வந்து சேருமாறு கட்டளை இட்டார்கள்.

அந்த கால பகுதி பொதுவாக சுற்றி வளைப்பு இடம்பெறுகின்ற காலப்பகுதி. அதனால் சுற்றி வளைக்கின்றார்கள் என்ற சிந்தனையில் சென்றோம்.

ஒரு மணி நேரத்திலே மீண்டும் வந்து அவர்கள் அனைவரையும் மாரியம்மன் கோவில் செல்லுமாறு பணித்தார்கள்.

அனைவரும் வந்து சேர்ந்த பொழுது தான் அந்த வரலாறு காணாத துர்ப்பாக்கிய குரூர கோர சம்பவம் இடம்பெற்றது. திடீரென்று ஒருவர் கிரீஸ் கத்தியால் ஒருவரை குத்தினார். மற்றவர்கள் கொண்டு வந்த கோடரியாலும், கத்தியாலும் மளமளவென வெட்டி சாய்த்தார்கள். இரத்தம் குபீர் குபீர் என பாய்ந்தது.

52 பேர் அந்த இடத்தில் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்ததை அனைவரும் கையறு நிலையில் அழுதழுது கண்டோம்.

கர்ப்பிணி ,ஆண் ,பெண், குழந்தை என்று பார்க்காமல் அனைவரையும் வெட்டி தள்ளினார்கள்.

வந்தவர்கள் தமிழிலே பேசினார்கள், ஏசினார்கள். பெண்களை கண் முன்னே கற்பழித்துக் கொலை செய்தார்கள். இந்த குருச்சேத்திரம் இரண்டு மணி நேரம் இடம்பெற்றது .மக்கள் மரண ஓலம், அவல குரல் எழுப்பினார்கள். எதுவுமே அவர்கள் காதில் கேட்கவில்லை .

மூன்று மணி நேரம் கழித்து காரைதீவில் இருந்து செஞ்சிலுவைச் சங்கத்தினரும், இராணுவத்தினரும் வந்து எஞ்சிய எங்களை காப்பாற்றினார்கள்.

நாங்கள் படுகொலை செய்யப்பட்ட 32பேரைஅழுதழுது ஒரே குழியில் புதைத்தோம்.ஏனையோரை தனித்தனியாக புதைத்தோம்.

எங்களை அவர்கள் காரைதீவிற்கு கொண்டு சென்றார்கள். காயப்பட்டவர்களை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். அங்கும் இரண்டு பேர் மரணித்தார்கள் .



இந்த சம்பவம் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியது மாத்திரமல்லாமல் மாறாத வடுக்களையும் ,மிகுந்த பயபீதியையும் ஏற்படுத்தியது. என்றார்.

பின்னர் ,1994 ஆம் ஆண்டிலே 121 குடும்பங்கள் அங்கு குடியேற்றப்பட்டன. அதற்குள் ,அங்கிருந்து 4 ஏக்கர் அரசகாணியை போலீஸ் அதிகாரி ஒருவர் ( இன்று உயிருடன் இல்லை) அடாத்தாக பிடித்து தென்னம்பிள்ளை வைத்தார் .அதனை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார் கிராம தலைவர் மயிலிப்போடி. நீதிமன்றத்தில் தீர்ப்பு அவருக்கு சாதகமாக வரும் என்று உணர்ந்த அந்த கும்பல் 1997களில் மயிலிப்போடியை படுகொலை செய்தார்கள்.

இவ்வாறு, இரத்தக் களரி கண்ட திராய்க்கேணி மக்கள் 32 வருடங்களுக்கு முன்பு அனுபவித்த அழியாத வரலாற்று வடுக்களை இன்று 32 வது வருடமாக நெஞ்சில் சுமந்து கொண்டு நினைவு கூருகின்றார்கள். இன்று அங்கு 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் ஆத்மா சாந்தி அடைவதாக.

**வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**